


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 03 | Issue: 8 | 4 Pages | 8.8.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 8 | 4 பக்கங்கள் | 8.8.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**எப்பொரு ளெத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு**

**விளக்கம்:** எப்பொருள் எத்தன்மைய தாய்த் தோன்றினாலும் (அத்தோற் றத்தை மட்டும் கண்டுமங்காமல்) அப் பொருளின் உண்மையான இயல்பை அறிவதே மெய்யுணர்வு.

# 20 லட்சம் மாணவர்களுக்கு லேப்டாப் வழங்கப்படும்: முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஆக. 8

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் உதவிப் பொறி யாளர்கள், நகரமைப்பு அலுவலர்கள் உள்ளிட்ட பல்வேறு பணி இடங்க ளுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள 2,538 இளைஞர்களுக்கு பணி நிய மன ஆணைகளை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

தொடர்ந்து இந்த நிகழ்வில் அவர் பேசியதாவது:

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி பெரும் உச்சத்தை தொட்ட மகிழ்ச்சியானசெய்தியைகூறுகிறேன். வளர்ச்சி விகிதம் 11.19% என மத்திய அரசின் திருத்தப்பட்ட மதிப்பீடு கூறு கிறது 14 ஆண்டுகளுக்கு முன் திமுக ஆட்சியில் இறுதியாக இரட்டை இலக்கம் 11.15%ஆக இருந்தது. சாதா ரணமாக இது நடந்து விடவில்லை. நெருக்கடி, அவதூறுகளை கடந்து சாதித்திருக்கிறோம்.

இது எனக்கான தனிப்பட்ட வெற்றி மட்டுமில்லை. கூட்டாக பெற்ற வெற்றி

திராவிட மாடல் ஆட்சிக்கான நற் சான்றிதழ் பத்திரம்தான் இந்த பொரு ளாதார வளர்ச்சி. இதோடு ஓய்ந்துவி டாமல் வளர்ச்சியை திராவிட மாடல் 2.0 ஆட்சியிலும் தொடருவோம்

நேற்று இரவில் இருந்து இது தான் *Talk of The Town; Talk of The Nation* என்றே சொல்லலாம். தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி 11.19% ஆக



உயர்ந்துள்ளது. இரட்டை இலக்க வளர்ச்சியை தமிழகம் கண்டுள்ளது, திமுக ஆட்சியில் தான் தமிழகத்தின் பொருளாதாரம் அதிகரிக்கிறது

கல்வி கொடுத்தால் மட்டும் போதாது, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு தரும் நோக்கிலும் செயலாற் றுகிறோம். கடந்த 4 ஆண்டுகளில் TNPSC, TRB, MRB, TNUSRB உள் ளிட்ட தேர்வாணையங்கள் மற் றும் பொதுத் துறை நிறுவனங்கள் மூலம் 1.08 லட்சம் பேருக்கு பணி நியமனங்கள் வழங்கியுள்ளோம்.

நான் முதல்வன் திட்டத்தின் மூலம் 3.28 லட்சம் பேருக்கும், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறைகள் மூலம் 2.65 லட்சம் பேருக்கும் வேலை வாய்ப்பு வழங்கியுள்ளோம். திராவிட மாடல் அரசு என்பது இளைஞர்களுக் கானது. கல்லூரியில் படிக்கும் 20 லட் சம் மாணவர்களுக்கு லேப்டாப் வழங் கப்படும். இவ்வாறு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

## கானா நாட்டில் ஹெலிகாப்டர் விபத்து: 2 மந்திரிகள் உள்பட 8 பேர் உயிரிழப்பு

கானா, ஆக. 8

மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்று கானா. இங்கு, தலைநகர் அக்ராவில் இருந்து அஷாந்தி பிராந்தியத்தில் உள்ள தங்க சுரங்க பகுதியான ஒபுவாசிக்கு ராணுவ ஹெலிகாப்டர் ஒன்று சென்றது. அதில் பாதுகாப்புத்துறை மந்திரி எட்வர்டு ஓமனே போமா மற்றும் சுற்றுச்சூழல் மந்திரி இப்ராகிம் முர்தலா முகமது உள்ளிட்ட அதிகாரிகள் இருந்தனர்.

ஹெலிகாப்டர் புறப்பட்ட சிறிது நேரத்தில் கீழே விழுந்து நொறுங்கியது. இந்த விபத்தில் ராணுவ மந்திரி மற்றும் சுற்றுச்சூழல் மந்திரி உள்பட 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். கானா வரலாற்றில் பதிவான மிக மோசமான விபத்தாக இது கருதப்படுகிறது. இதையடுத்து கானா அரசாங்கம் இந்த விபத்தை தேசிய துக்கமாக அறிவித்தது.

## ரஷியாவின் கம்சாட்கா தீபகற்பத்தில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

மாஸ்கோ, ஆக. 8


ரஷியாவின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள கம்சாட்கா தீபகற்பத்தில் கடந்த சில நாட்களாக நில நடுக்கங்கள் ஏற்பட்டு வருகிறது. மேலும் முன்னதாக ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தின் காரணமாக 600 ஆண்டுகளாக உறங்கிக் கொண்டிருந்த எரிமலை ஒன்று வெடித்து சிதறியது. நிலநடுக்கமே எரிமலை வெடிக்க காரணம் என்று வல்லுநர்கள் தெரிவித்தனர்.

இந் நிலையில் கம்சட்கா பகுதியில் இன்று மாலை 4 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6 ஆக பதிவாகி உள்ளது என தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

25 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 51.47 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 159.30 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை.

ரஷியாவின் கம்சாட்கா தீபகற்பத்தில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கம் அப்பகுதி மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. சுனாமி அறிவிப்பு வெளியிடப்பட்டதா என்ற விவரங்களும் வெளியாகவில்லை.

## இந்தியாவுக்கு மேலும் 25 சதவீத வரி: டிரம்ப் அறிவிப்பால் பரபரப்பு



நியூயார்க், ஆக. 8

அமெரிக்க ஜனாதிபதியாக கடந்த ஜனவரி 20ந்தேதி பொறுப்பேற்று கொண்ட டொனால்டு டிரம்ப், பல உத்தரவுகளை பிறப்பித்து வருகிறார். அதில் ஒன்றாக, நாடுகளுக்கு வரி விதிப்பதும் அடங்கும்.

வரி வருவாயை கொண்டு நாட்டின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நிலைக்கு அமெரிக்கா தள்ளப்பட்டது போல் இருந்தபோதும், அதனை பற்றியெல்லாம் கவலை கொள்ளாமல், சீனா உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு எதிராக கடுமையான வரி விதிப்புகளை அமல்படுத்தி டிரம்ப் உத்தரவிட்டார்.

பிரேசில் நாட்டுக்கு மொத்தம் 50 சதவீத வரி விதிப்பதற்கான உத்தரவிலும், சமீபத்தில் டிரம்ப் கையெழுத்திட்டார். இதேபோன்று, இந்திய இறக்குமதி பொருட்களுக்கு 25 சதவீத வரி விதிப்பு மற்றும் கூடுதல் அபராதம் ஆகியவற்றை விதித்து டிரம்ப் உத்தரவிட்டார்.

அது ஆகஸ்டு 1 முதல் அமலுக்கு வர இருக்கிறது என முதலில் தெரிவிக்கப்பட்டது. இது பின்னர் 7ந்தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. ரஷியாவிடம் இருந்து இந்தியா எண்ணெய்யை வாங்கி வருகிறது. இதற்கு அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. அதற்கு பல காரணங்களையும் கூறி வருகிறது.

உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷியாவுக்கு உதவும் வகையில் இந்தியா செயல்படுகிறது என்றும் குறைந்த விலைக்கு எண்ணெய்யை இந்தியா வாங்கி, பிற நாடுகளிடம் அதிக விலைக்கு விற்கிறது என்றும் குற்றச்சாட்டுகளை டிரம்ப் சுமத்தியுள்ளார்.

ஆனால், ரஷியாவிடம் இருந்து உரம், யுரேனியம் போன்ற பொருட்களை அமெரிக்கா இறக்குமதி செய்வது பற்றி இந்தியா இன்று கேள்வி எழுப்பியது. அதற்கு டிரம்ப் மழுப்பலான பதில் கூறினார். அமெரிக்க ஜனாதிபதியாக இருக்கும் டிரம்ப், இந்த விசயம் தனது கவனத்திற்கு வரவில்லை. அதுபற்றி நான் ஆய்வு செய்வேன் என கூறினார்.

இந்நிலையில் இந்தியாவுக்கு மேலும் 25 சதவீத வரி விதிக்கப்படுகிறது என டிரம்ப் இன்று அறிவித்து உள்ளார். இதனால், இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு மொத்தம் 50 சதவீதம் வரி விதிக்கப்படும்.

ரஷியாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவது நிறுத்தப்பட வேண்டும் என டிரம்ப் காலக்கெடு விதித்திருந்த நிலையில், டிரம்பின் இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. மருந்து பொருட்களுக்கான வரி விதிப்புகள் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்றும் கூறியுள்ள நிலையில், இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் வர்த்தகத்தில் பெருமளவில் பாதிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் சி.என்.பி.சி. செய்தி சேனலுக்கு நேற்று அளித்த பேட்டி ஒன்றில் கூறும்போது, இந்தியா அதிக வரி விதிக்கும் நாடாக உள்ளது. நம் மீது, வேறு யாரையும் விட மிக அதிக வரியை இந்தியா விதிக்கிறது. அவர்களுடைய வரி அதிகம் என்பதனால், நாம் மிக மிக சிறிய அளவிலேயே அவர்களுடன் வர்த்தகம் செய்கிறோம்.

ஒரு நல்ல வர்த்தக உறவுக்கான நாடாக இந்தியா இருக்கவில்லை. அதனால், நாம் அவர்களுக்கு 25 சதவீத வரி விதித்திருக்கிறோம். அவர்கள் ரஷியாவிடம் இருந்து எண்ணெய்யை வாங்குகிறார்கள். இதனால், அடுத்த 24 மணிநேரத்தில் இந்தியா மீது பெரிய அளவில் வரி விதிக்கலாம் என நான் நினைக்கிறேன் என டிரம்ப் கூறிய நிலையில் இந்த வரி விதிப்பு அறிவிப்பு வெளிவந்து உள்ளது.

## திருநெல்வேலி: சிறப்பாக பணியாற்றிய போலீசார் 140 பேருக்கு எஸ்.பி. பாராட்டு

திருநெல்வேலி, ஆக. 8

திருநெல்வேலி மாவட்டத்தில் ஏ. எஸ்.பி., டி.எஸ்.பி., போலீஸ் இன்ஸ் பெக்டர்கள் மற்றும் சப்இன்ஸ்பெக் டர்களுக்கான மாதாந்திர ஆய்வு கூட் டம்மாவட்டஎஸ்.பி.அலுவலகத்தில், திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் தலைமையில் நடை பெற்றது. இந்த கூட்டத்தில் மாவட் டத்தில் உள்ள அனைத்து வழக்குக ளின் புலன் விசாரணை குறித்தும், நிலுவையில் உள்ள வழக்குகள் குறித் தும், கஞ்சா மற்றும் புகையிலை போன்ற போதைப்பொருட்கள் கடத் தல் மற்றும் விற்பனையில் ஈடுபடுப வர்கள் மீது கடும் நடவடிக்கை மேற் கொள்வது குறித்தும், பொது அமைதிக்கு பங்கம் விளைவிப்பவர்கள் மீதும், ரவுடிகள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் நட வடிக்கைகள் குறித்தும், நீதிமன்ற அலுவல்கள் குறித்தும் மற்றும் பல் வேறு நிகழ்வுகள் குறித்தும் ஆய்வு நடைபெற்றது.

அதற்கு முன்னதாக திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. அலுவலகத்தில் மாவட்ட காவல்துறையின் இருசக்கர வாகனங்கள், நான்கு சக்கர வாகனங் கள், கனரக வாகனங்கள் மற்றும் காவ லர்கள் அவசர காலங்களில் பணிக்கு செல்லும் இருசக்கர வாகனங்கள், உயர்அதிகாரிகள்பயன்படுத்தும் வாக னங்கள், நல்ல முறையில் பராமரிக்கப் படுகிறதா என எஸ்.பி. ஆய்வு மேற் கொண்டு வாகன ஓட்டுநர்களுக்கு முக்கிய அறிவுரைகள் வழங்கி, வாக னங்களின் நிறை குறைகளை கேட்டு தெரிந்து கொண்டார்.

பின்பு மாவட்டத்தில் கொலை, திருட்டு மற்றும் போக்சோ வழக்குக ளில் உள்ள சாட்சிகளை விரைவாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவா ளிகளுக்கு தண்டனை பெற்று கொடுத்த காவல் அதிகாரிகள், நீதி மன்ற விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த குற்றவாளிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியது மற்றும் போதைப்பொருட் கள் விற்பனையில் ஈடுபட்ட நபர் களை திறம்பட செயல்பட்டு கைது செய்தது போன்ற செயல்களில் ஈடு



பட்ட காவல் அதிகாரிகள் மற்றும் அரசு வழக்குரைஞர்கள் உட்பட மாவட்டத்தில் சிறப்பாக பணிபுரிந்த 140 பேரை மாவட்ட எஸ்.பி. நேரில் அழைத்து நற்சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

இந்த கூட்டத்தில் திருநெல்வேலி மாவட்ட ஏ.டி.எஸ்.பி., ஏ.எஸ்.பி., டி.எஸ்.பி.க்கள், அரசு வழக்குரைஞர் கள், போலீஸ் இன்ஸ்பெக்டர்கள், சப் இன்ஸ்பெக்டர்கள் மற்றும் மாவட்ட ஊர்க்காவல் படை வட்டார தளபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வடமதுரை அருகே கணவன் மனைவிக்கு அரிவாள் வெட்டு



திண்டுக்கல் மாவட்டம் வடமதுரையை அடுத்த ரெட்டியபட்டி இந்திரா காலனி சேர்ந்த கணவன் பழனிச்சாமி, மனைவி காளியம்மாள் ஆகிய 2 பேரை அதே பகுதியை சேர்ந்த மணிகண்டன் என்பவர் அரிவாளால் வெட்டினார்.

இதில் படுகாயம் அடைந்த பழனிச்சாமி காளியம்மாள் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரியில் மருத்துவமனையில் அனுமதி மேற்படி சம்பவம் குறித்து வடமதுரை போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்






தினகனி

8.8.2025

# கிருஷ்ணகிரி அருகே பஸ் கவிழ்ந்து விபத்து 34 பேர் காயம்

கிருஷ்ணகிரி, ஆக. 8

கிருஷ்ணகிரி மாவட்டம் குருபரப்பள்ளி அருகே போலுப்பள்ளியில் தனியார் கார்மென்ட்ஸ் நிறுவனம் இயங்கி வருகிறது. இந்த நிறுவனத்தில் கிருஷ்ணகிரி மற்றும் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். அவர்கள் தினமும் நிறுவன பஸ்சில் வேலைக்கு சென்று திரும்புவது வழக்கம்.

இந்த நிலையில் திருப்பத்தூர் மாவட்டம் குனிச்சியில் இருந்து அந்த தனியார் நிறுவனத்திற்கு ஊழியர்களை ஏற்றிக் கொண்டு நிறுவன பஸ் நேற்று காலை புறப்பட்டது.



பஸ்சை திருப்பத்தூர் மாவட்டம் நாயக்கனூர் அருகே உள்ள மங்களப்பட்டியை சேர்ந்த சீனிவாசன் (வயது 40) என்பவர் ஓட்டிச் சென்றார். பஸ்சில் 53 பேர் இருந்தனர். அந்த பஸ் குனிச்சியில் புறப்பட்டு, மாடரஅள்ளி, கன்னண்டஅள்ளி வழியாக திருவண்ணாமலை கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலை பெரியபன முட்லு பக்கமாக வந்து கொண்டிருந்தது.

அந்த நேரம் பஸ் முன்னால் சென்ற வாகனத்தை முந்தி செல்ல முயன்றதாக கூறப்படுகிறது. அப்போது கிருஷ்ணகிரி திருவண்ணாமலை நோக்கி வந்த சரக்கு வேன் மீது தனியார் நிறுவன பஸ் உரசி க வி ழ்ந் து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் பஸ்சில் இருந்த 34 பணியாளர்கள் காயம் அடைந்தனர். விபத்து குறித்து தகவல் அறிந்ததும் பர்கூர் தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறை நிலை அலுவலர் பழனி தலைமையில் வீரர்கள் விரைந்து சென்று இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்டனர்.

அதே போல கந்திகுப்பம் போலீசாரும் விரைந்து சென்றனர். இதைத் தொடர்ந்து காயம் அடைந்தவர்களை அவர்கள் மீட்டு சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலமாக கிருஷ்ணகிரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விபத்து குறித்து கந்திகுப்பம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தந்தை போல் மகனும் குற்றம் சுமத்தத் தொடங்கினால் நிலைமை என்னாகும்? தங்கர் பச்சான் பரபரப்பு பதிவு

சென்னை ஆக. 8

பா.ம.க.வில் நிறுவனர் ராமதாஸ், தலைவர் அன்புமணி ராமதாஸ் இடையே மோதல் போக்கு நீடித்து வருகிறது. கட்சியில் இருவரும் தனித்தனியாக செயல்பட்டு, நிர்வாகிகள் நீக்கம், சேர்ப்பு என புதிய, புதிய அறிவிப்புகளை வெளியிட்டு வருகின்றனர். கட்சியில் தங்களது பலத்தை நிரூபிக்க இருவரும் போட்டி கூட்டத்தையும் நடத்துகிறார்கள்.

இந்த நிலையில் அன்புமணி ராமதாஸ், தந்தையின் மீதான மதிப்பு வரலாற்றில் நிலைக்க வேண்டும் என்பதற்காகவே அத்தனை குற்றச்சாட்டுகளுக்கும் பதிலுரை கூறாமல் அமைதி காக்கிறார் என்று இயக்குநர் தங்கர் ப ச் ச ான் கூறியுள்ளார். இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:



நாள்தோறும் மகன் மீது குற்றம் சுமத்தும் தந்தை போல், மகனும் தந்தை மீது குற்றம் சுமத்தத் தொடங்கினால் நிலைமை என்னாகும்? தந்தையின் மீதான மதிப்பு வரலாற்றில் நிலைக்க வேண்டும் என்பதற்காகவே மகன் அ த் த ை ன குற்றச்சாட்டுகளுக்கும் பதிலுரை கூறாமல் அமைதி காக்கிறார் எனும் பெருந்தன்மை இப்பொழுது புரியாமல் போகலாம்!

கடந்த காலங்களில் பொறாமையினாலும், வயிற்றெரிச்சலினாலும் பாட்டாளி மக்கள் கட்சியின் மீது வன்மத்தை ஊடகங்களில் கக்கி பிழைப்பு நடத்திக் கொண்டிருந்தவர்கள் யார், யார் என்பது இம் மக்களுக்கு புரியும்!

சமூக வலைதளத்தை பயன்படுத்தி வயிறு வளர்த்துக் கொண்டிருக்கும் இந்த ஓநாய்கள் எல்லாம் இப்போது ஐ ய ா ை வ புகழ்வதுபோல் புகழ்ந்து கட்சியை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதையும் மக்கள் நன்கு கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

புறணிப்பேசி வயிறு வளர்க்கும் இத்தகைய சமூக வலைதளப் போராளிகளின் மானம் கெட்ட பிழைப்பு நெடுநாள் நடக்காது என்பதை காலம் விரைவில் உணர்த்தும்! காத்திருங்கள்! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பனை, தென்னை மரங்களில் தீ: தூத்துக்குடியில் பரபரப்பு

தூத்துக்குடி: ஆக. 8

திருச்செந்தூர் கன்னியாகுமரி கிழக்கு கடற்கரை சாலையோரத்தில் குலசேகரன்பட்டினம் அருகேயுள்ள கல்லாமொழி பகுதியில் புதிய அனல்மின்நிலையம் கட்டுமான பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. தற்போது அங்கு பரிசோதனை ஓட்டங்கள் அவ்வப்போது நடந்து வருகிறது.

இந்த நிலையில் இந்த அனல்மினிலையம் அருகேயுள்ள சாகுல், சண்முகம் ஆகியோரது தோட்டங்களில் நேற்று மதியம் சுமார் 1 மணியளவில் திடீரென தீபிடித்து எரிந்தது. சுட்டெரித்த வெயில், காற்றின் வேகத்தில் தீ மளமளவென பரவியது. தோட்டங்களின் வேலிகள், காய்ந்த ஓலைகளை தொடர்ந்து பனை, தென்னை மரங்களில் தீப்பிடித்து எரிந்தது.



சுமார் 30 அடி உயர பனை, தென்னை மரங்களில் தீப்பற்றிய எரிய தொடங்கிய நிலையில், அந்த வழியே சாலையில் செல்லும் வாகன ஓட்டிகள் அச்சமடைந்தனர். மேலும், அனல்மின் நிலையத்தை ஒட்டியுள்ள பகுதியில் தீப்பிடித்து எரிந்த தகவல் அறிந்த திருச்செந்தூர் தீயணைப்பு வீரர்கள் நிலைய அலுவலர் பாபநாசம் தலைமையில் விரைந்து சென்று தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

ஒரு மணி நேரம் போராடி தீயை அணைத்து கட்டுக்குள் கொண்டு வந்தனர். இத்தீவிபத்தில் 50க்கும் மேற்பட்ட பனை, தென்னை மரங்கள் தீயில் கருகி சேதமடைந்தன. இதனால் பரபரப்பு ஏற்பட்டது. தீவிபத்துக்கான காரணம் உடனடியாக தெரியவில்லை.

# சென்னை-திருச்சி விமானத்தில் தொழில் நுட்பக்கோளாறு; பயணிகள் அவதி

சென்னை, ஆக. 8

சென்னையில் இருந்து திருச்சிக்கு 68 பயணிகள், 5 பணியாளர்கள் உள்பட 73 பேரை ஏற்றிக்கொண்டு இன்று காலை 5.45 மணிக்கு இண்டிகோ விமானம் புறப்பட தயாரானது. ஓடுபாதையில் சென்று கொண்டிருந்த விமானத்தில் திடீரென தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டதை விமானி கண்டறிந்தார்.

உடனடியாக விமானத்தை நிறுத்திவிட்டு, சென்னை விமான நிலைய கட்டுப்பாட்டு அறைக்கு விமானி தகவல் தெரிவித்தார்.

இதையடுத்து விமானம் ஓடுபாதையிலேயே நிறுத்தப்பட்டது. இதைத்தொடர்ந்து விமான என்ஜினீயர்கள் தொழில்நுட்பக்கோளாறை சரிசெய்யும் பணியில் ஈடுபட்டனர்.

பழுதுபார்ப்பு ஒரு மணி நேரத்திற்குள் முடிக்கப்பட்டது, மேலும் விமானம் காலை 6.45 மணிக்கு புறப்பட்டது. ஒரு மணி நேரம் தாமதம் ஏற்பட்டதால் பயணிகள் கடும் அவதி அடைந்தனர். சமீப காலமாக விமானத்தில் அடிக்கடி தொழில்நுட்ப கோளாறு பிரச்சினை ஏற்பட்டு வருவது, பயணிகள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

# முதலீடுகளுக்கான முதல் முகவரி ஆகியுள்ளது தமிழ்நாடு: அமைச்சர் தங்கம் தென்னரசு பேச்சு


சென்னை, ஆக. 8

தமிழக நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

“முதல்அமைச்சரின் வழிகாட்டுதலோடு – சீரான கொள்கைநெறி வழியில் நடக்கும் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளில் ஒன்று, மணிமகுடத்தில் மற்றொரு பொறித்த வைரக்கல்லாக தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி இரட்டை இலக்கத்தை எட்டி இருக்கிறது.

ஏற்கனவே நாம் சொல்லி இருக்கக்கூடிய 9.69% என்கிற அந்த GSDP உடைய இலக்கையும் தாண்டி, இன்றைக்கு 11.8% பொருளாதார குறியீடுகள் உயர்ந்து இருக்கின்றன. ஏறத்தாழ 12% நெருங்கி வரக்கூடிய வாய்ப்பை பெற்று இருக்கிறோம்.

நம்முடைய சாதனையை நாம்தான் முறியடிக்க முடியும் என்கிற வகையில் 9.69% என்ற ஒற்றை இலக்கத்தில் இருந்த பொருளாதாரவளர்ச்சி சதவீதத்தை இன்றைக்கு இரட்டை இ ல க க த் தி ற் கு கொண்டு வந்திருக்கிற மகத்தான சாத ை ன ை ய முதல் அமைச்சருடைய ஆட்சி உருவாக்கியிருக்கிறது.



இந்த இரட்டை இலக்கத்திலே பொருளாதார ஆட்சியை உருவாக்குவது, Realtermsல் வளர்ச்சி பெறுவது என்பது கலைஞர் ஆட்சி பொறுப்பிலே இருந்தபோது 13% வளர்ச்சியை நாம் பெற்று இருந்தோம். அதன்பின் 14 வருடத்திற்கு பிறகு இன் ை ற க் கு முதல்அமைச்சரின் ஆட்சியில்தான் இரட்டை இலக்க வளர்ச்சியைத் தமிழ்நாடு பெற்று இருக்கிறது.

இந்திய அளவில் பல மாநிலங்களை ஒப்பிடும் போது தமிழ்நாடு தான் இந்த இரட்டை இலக்க வ ள ர் ச் சி ை ய பெற்று இருக்கிறது என்பது குறிப்பிட்டத்தக்கது. எனவே இந்த வளர்ச்சி என்பது 2030ம் ஆண்டு 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை எட்டுவோம் என்பதற்கு திடமான வழியை வகுத்து தந்துள்ளது.

முதல்அமைச்சரின் சீரிய முயற்சிகளிலான தொழில் முதலீடுகள், தொழில் முதலீடுகள் மூலம் கிடைத்த வேலை வாய்ப்புகள் என அனைத்தின் காரணமாக இந்தப் பொருளாதார வளர்ச்சி அமைந்திருகிறது. பொருளாதார வளர்ச்சிக்கான முழு சூழ்நிலைகளையும் நாம் உருவாக்கி இருக்கிறோம். நாம் முதலீடுகளுக்கான முதல் முகவரி தமிழ்நாடு என்கிற அளவில் முதல்அமைச்சர் முயற்சியின் காரணமாக ஈர்க்கப்பட்டு இருக்கக் கூடிய ஏராளமான முதலீடுகளே இந்தப் பெருமையைத் தந்து இருக்கிறது.

நிதி நிலைமையை நாம் சரியாகக் கையாண்டு இருக்கிறோம், நாட்டின் பொருளாதாரத்தை நாம் உயர்த்தி இருக்கிறோம். கடன் வாங்குகிறார்கள் என குற்றச்சாட்டு வைக்கிறார்கள். ஆனால் வரைமுறைகளுக்கு உட்பட்டு முதலீடுகளுக்காக நாம் வாங்குகின்ற கடன்கள் தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஊக்குவித்துள்ளது என்பதைக் காட்டுகின்றது. மத்திய அரசு நமக்கு உரிய நிதிகளை விடுவிக்காத போதிலும், நமது முதல்அமைச்சரின் கூரிய நோக்கிலான வழிகாட்டுதல் மூலம் இந்த வளர்ச்சியைப் பெற்றுள்ளோம்.”


இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கோவில் திருவிழாவிற்கு அனுமதி அளிக்கும் விவகாரம்; காவல்துறைக்கு சென்னை ஐகோர்ட்டு எச்சரிக்கை

சென்னை, ஆக. 8

கோவை மாவட்டம் பாப்பம்பட்டியில் உள்ள வீரமாத்தி அம்மன் கோவிலில் ஆகஸ்ட் 12 ஆம் தேதி ஆடி பெருந்திருவிழா நடத்த இருப்பதாகவும் இந்த திருவிழாவில் ஒலிப்பெருக்கி பயன்படுத்த அனுமதி மற்றும் பாதுகாப்பு கேட்டு சுரேஷ் குமார் என்பவர் சூலூர் காவல் நிலையத்தில் மனு கொடுத்து இருந்தார்.

கடந்த ஜூலை 7 ஆம் தேதி கொடுத்த விண்ணப்பத்தின் மீது இதுவரைக்கும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறி சென்னை ஐகோர்ட்டில் சுரேஷ் குமார் என்பவர் மனு தாக்கல் செய்து இருந்தார். இந்த வழக்கை விசாரித்த சென்னை ஐகோர்ட்டு காவல்துறையினருக்கு கடும் எச்சரிக்கையை விடுத்துள்ளது.



திருவிழாவிற்கு அனுமதி ே க ா ரு ம் விண்ணப்பங்களை 7 நாட்களில் பரிசீலிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ள சென்னை ஐகோர்ட்டு, விண்ணப்பங்களை பரிசீலிக்காததால் திருவிழாவிற்கு வசூலித்த நிதிகள் வழக்கு செலவுக்கு பயன்படுத்தும் நிலை ஏற்படுகிறது.

கடைசி நேரத்தில், நீதிமன்றத்தை நாடச் செய்யும் அதிகாரிகளுக்கு எதிராக துறைரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். கோவில் திருவிழாக்களுக்கு அனுமதி கோரி நீதிமன்றத்தை நாட செய்தால் சம்மந்தப்பட்ட அதிகாரியே விழா செலவுகளை ஏற்க வேண்டி வரும் என்றும் தெரிவித்துள்ளது.

# பள்ளிக்கு புறப்பட்டு கொண்டிருந்தபோது மின்சாரம் தாக்கி 5ம் வகுப்பு மாணவி உயிரிழப்பு

தஞ்சாவூர் ஆக. 8

தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி மாதா கோவில் தெருவைச் சேர்ந்தவர் ஸ்டிபன்ராஜ். இவரது மனைவி ஏஞ்சலின் பாத்திமா. இவர்களது மகள் இனிய தர்ஷினி (10 வயது). இவர் திருக்காட்டுப்பள்ளியில் உள்ள அரசு தொடக்கப் பள்ளியில் 5ம் வகுப்பு படித்து வந்தார்.

இந்த நிலையில், இன்று காலையில் இனிய தர்ஷினி பள்ளிக்கு செல்வதற்காக வழக்கம்போல் எழுந்து குளித்து கிளம்பி கொண்டிருந்தார். அப்போது வீட்டிற்கு முன்புறம் இருந்த கொட்டகையில் இரும்பு கம்பத்தை தொட்டுள்ளதாக தெரிகிறது. அதில் இருந்து எதிர்பாராதவிதமாக மின்சாரம் பாய்ந்ததில், சிறுமி இனிய தர்ஷினி தூக்கி வீசப்பட்டார். உடனடியாக அருகில் இருந்தவர்கள் சிறுமியை மீட்டு திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றனர். அங்கு அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள் இனிய தர்ஷினி ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்த புகாரின் பேரில் திருக்காட்டுப்பள்ளி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# புதுக்கோட்டையில் பூட்டியிருந்த வீட்டில் திருட்டு

புதுக்கோட்டை, ஆக. 8

புதுக்கோட்டை அன்னச்சத்திரம் ஜே.என்.நகரை சேர்ந்தவர் கதிரேசன். இவர் சிங்கப்பூரில் வேலை பார்த்து வருகிறார். இவரது மனைவி கார்த்திகா (வயது 33). இவர் வீட்டில் தனது குழந்தைகளுடன் வசித்து வருகிறார். சம்பவத்தன்று தனது சகோதரியின் மகன் பிறந்தநாள் விழாவுக்காக கார்த்திகா, குழந்தைகளுடன் வீட்டை பூட்டிவிட்டு பெங்களூரு சென்றார். பின்னர் கார்த்திகா வீடு திரும்பினார்.

அப்போது வீட்டின் முன்பக்க கதவின் பூட்டு உடைக்கப்பட்டு திறந்து கிடந்தது. இதைப்பார்த்து அதிர்ச்சியடைந்த அவர் வீட்டினுள் சென்று பார்த்தபோது பீரோ உடைக்கப்பட்டு,

அதில் இருந்த பொருட்கள் வெளியே சிதறி கிடந்தன.

மேலும் பீரோவில் வைக்கப்பட்டிருந்த 88 பவுன் நகைகள் மற்றும் 170 கிராம் வெள்ளி பொருட்களை மர்மநபர்கள் திருடிச்சென்றது தெரியவந்தது. இது குறித்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து அப்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்களில் பதிவான காட்சிகளை பார்வையிட்டு விசாரித்து வருகிறார்கள்.

# திருப்பூரில் வரதட்சணை கொடுமையால் இளம்பெண் தற்கொலை

திருப்பூர் ஆக. 8

திருப்பூர் மாவட்டத்தில் ரிதன்யா என்ற பெண் வரதட்சணை கொடுமை தாங்க முடியாமல் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் தமிழ்நாட்டையே உலுக்கியது. தற்கொலை செய்வதற்கு முன்பு ரிதன்யா அவரது தந்தைக்கு வாட்ஸ்அப் மூலம் அனுப்பிய ஆடியோக்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதனையடுத்து, ரிதன்யா தற்கொலை தொடர்பாக அவரது கணவர் கவின்குமார், மாமனார் ஈஸ்வரமூர்த்தி, மாமியார் சித்ரா தேவி ஆகியோரை போலீசார் கைது செய்தனர்.



இந்த நிலையில், திருப்பூர் பிரண்ட்ஸ் கார்டன் பகுதியில் திருமணமான 10 மாதத்தில் இளம்பெண் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. திருப்பூரை சேர்ந்த பிரீத்தி என்ற பெண்ணுக்கும், ஈரோட்டைச் சேர்ந்த சதீஷ்வர் என்பவருக்கும் கடந்த ஆண்டு செப்டம்பர் 15ந்தேதி திருமணம் நடந்தது. திருமணத்தின்போது பிரீத்தி குடும்பத்தின் சார்பில் 120 சவரன் நகை, ரூ.25 லட்சம், இன்னோவா கார் உள்ளிட்டவை கணவர் வீட்டாருக்கு தரப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்த நிலையில் பிரீத்தியின் பூர்வீகச் சொத்துவிற்பனையில் வந்த ரூ.50 லட்சத்தை கேட்டு கணவர் குடும்பத்தினர் அவரை கொடுமைப்படுத்தியதாக கூறப்படுகிறது. இதனால் கடந்த ஒரு மாதமாக மன உளைச்சலில் இருந்த பிரீத்தி தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொண்டார். இது தொடர்பாக உயிரிழந்த பெண்ணின் கணவர் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது பெண்ணின் பெற்றோர் போலீசில் புகார் அளித்துள்ளனர்.

# பா.ம.க. பொதுக்குழு கூட்டம்; அன்புமணி ராமதாஸ் புதிய அறிவுறுத்தல்



சென்னை, ஆக. 8

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாசுக்கும், அவரது மகனான டாக்டர் அன்புமணி ராமதாசுக்கும் இடையே மோதல் போக்கு நீடித்து வருகிறது. கட்சியில் முழு அதிகாரம் தனக்கே உள்ளது என்று இருவரும் கூறி வருகின்றனர். இருவரும் போட்டி கூட்டம் நடத்துவதுடன், இருவரும் மாறி மாறி ஒருவரையொருவர் பகிரங்கமாக குற்றம் சாட்டியும் வருகின்றனர்.

இந்நிலையில், பாட்டாளி மக்கள் கட்சியின் பொதுக்குழு கூட்டம் வரும் 9ந்தேதி காலை 11 மணிக்கு மாமல்லபுரத்தில் உள்ள கான்புளுயன்ஸ் (Confluence) அரங்கில் நடைபெறுகிறது. கட்சியின் வளர்ச்சி பணிகள் குறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது என டாக்டர் அன்புமணி தெரிவித்து உள்ளார்.

இந்நிலையில், பொதுக்குழுவிற்கு கட்டாயம் பங்கேற்க வேண்டியவர்கள் பற்றிய அறிவிப்பை கட்சி தலைமை வெளியிட்டு உள்ளது. 1. மாவட்டத்தில் உள்ள அனைத்து மாநில நிர்வாகிகள். 2. மாவட்டத்தில் உள்ள அனைத்து மாவட்ட நிர்வாகிகள்.

3. ஒன்றிய, நகர, பேரூர், செயலாளர்கள் மற்றும் தலைவர்கள் ஆகியோர் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என்று பா.ம.க. தலைமை அறிவுறுத்தி உள்ளது.

வருகிற 17ந்தேதி சிறப்பு பொதுக்குழு கூட்டம் நடைபெற உள்ளது என அக்கட்சியின் நிறுவனர் ராமதாஸ் ஏற்கனவே அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# இரட்டை இலக்கப் பொருளாதாரத்தை எட்டிய தமிழ்நாடு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பெருமிதம்

சென்னை, ஆக. 8

பத்தாண்டுகளுக்குள் இரட்டை இலக்கப் பொருளாதாரத்தை அடைவோம் என்ற இலக்கை முதல்அமைச்சர் நான்கே ஆண்டகளில் சாதித்துக் காட்டியிருக்கிறார் என அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பெருமிதம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்கூறப்பட்டுள்ளதாவது;

“கடந்த சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக திருச்சி சிறுகனூரில் நடைபெற்ற தேர்தல் சிறப்பு மாநாட்டில் 7 அம்ச உறுதிமொழிகளை வெளியிட்டு மக்களிடம் வாக்கு கேட்டார் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின். அதில் முதல் அம்சம், பொருளாதாரம். “வளரும் வாய்ப்புகள் வளமான தமிழ்நாடு



அடுத்த பத்தாண்டுகளுக்குள் இரட்டை இலக்க பொருளாதாரத்தை எட்டுவது முதல் இலக்கு” என்று உறுதியளித்தார்.

அவரது வாக்குறுதியை நம்பி வாக்களித்து தன்னை முதல்அமைச்சராக்கிய மக்களுக்காக ஓயாது உழைத்து, தமிழ்நாட்டு பொருளாதாரத்தை இரட்டை இலக்கத்தில் வளர்ச்சியடைய வைத்து, தான் அளித்த உறுதிமொழியைக் காப்பாற்றியுள்ளார். திருச்சி சிறுகனூரில் கழகத் தலைவர் முதல்அமைச்சர் உறுதியளித்த நாள் 2021 மார்ச் 7.

தமிழ்நாடு 11.29% என்ற இரட்டை இலக்கப் பொருளாதாரத்தை எட்டியிருப்பதை மத்திய அரசின் புள்ளி விவரத்துறைஅறிவித்துள்ள நாள் 2025 ஆகஸ்ட் 5. பத்தாண்டுகளுக்குள் இரட்டை இலக்கப் பொருளாதாரத்தை அடைவோம் என்ற இலக்கை முதல்அமைச்சர் நான்கே ஆண்டகளில் சாதித்துக் காட்டியிருக்கிறார். ஆகையால்தான் இந்தியாவிலேயே முதன்மை முதல்அமைச்சராகத் திகழ்கிறார் மு.க.ஸ்டாலின்.”

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# குப்பைகளால் வீசும் துர்நாற்றம், கோட்டைக்கு வந்தடையவில்லையா முதல்வரே? நயினார் நாகேந்திரன்

சென்னை ஆக. 8

தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது: சென்னையில் ஐந்தாவது நாளாகத் தொடரும் தூய்மைப் பணியாளர்களின் போராட்டத்தால், தலைநகரமே குப்பைக் கூளமாக உருமாறிக் கிடக்கிறது. பள்ளிக்கு செல்லும் பிள்ளைகள் மலையாகக் குவிந்து கிடக்கும் குப்பைகளைத் தாண்டி குதித்துச் செல்கிறார்கள். சாலையில் பயணிக்கும் பொதுமக்கள் துர்நாற்றம் பொறுக்காமல் மூக்கை மூடிக் கொள்கின்றனர். எங்கு எப்போது என்ன பெருந்தொற்று உருவாகுமோ என அனைவரும் பதற்றத்தில் உள்ளனர். ஆனால், சென்னை மேயர் பிரியா உள்ளிட்ட ஆளும் தி.மு.க. அரசைச் சேர்ந்த அதிகாரிகளோ, அமைச்சர்களோ, முதல்வரோ போராடுபவர்களின் கோரிக்கைகளுக்கு இதுநாள் வரை செவிமடுக்கவில்லை. குறைந்தபட்சம் அவர்களை நேரில் சென்று சந்தித்து சமாதானம் செய்யவும் இல்லை. பெருகிவரும் குப்பைகளால் வரப்போகும் ஆபத்தை அறியாமல் தங்கள் வீடு, இடம், அலுவலகம் ஆகியவை மட்டும் சுத்தமாக இருந்தால் போதும் என போராட்டக்காரர்களையும் பொதுமக்களின் ஆரோக்கியத்தையும் ஒருசேர அலட்சியப்படுத்தும் தி.மு.க. அரசு, மக்களிடம் இருந்து இன்னும் எத்தனை எதிர்ப்புகள் கிளம்பினாலும் திருந்தப் போவதில்லை! அடுத்த முறை அரியணை ஏறும் வாய்ப்பும் கிடைக்கப் போவதில்லை! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# கட்டணமில்லா அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்துக்கு விண்ணப்பிக்கலாம் அமைச்சர் சேகர்பாபு தகவல்

சென்னை ஆக. 8

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினின் வழி காட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை சார்பில் செயல்படுத்தப்படும் கட்டணமில்லா அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தில் பங்கேற்க விரும்பும் தகுதியுடைய மூத்த குடிமக்கள் விண்ணப்பித்து பயன்பெறலாம் என இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் மானசரோவர் மற்றும் முக்திநாத் ஆகியவற்றிற்கு ஆன்மிகப் பயணம் சென்று வருபவர்களுக்கு ஆண்டுதோறும் மானியம் வழங்கப்பட்டு வருவதோடு, ஆடி மாதத்தில் அம்மன் திருக்கோவில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் வைணவ திருக்கோவில்களுக்கும், ராமேஸ்வரத்திலிருந்து காசிக்கும், அறுபடை வீடுகளுக்கும் பக்தர்கள் கட்டணமில்லாமல் ஆன்மிகப் பயணமாக அழைத்துச் செல்லப்பட்டு வருகின்றனர்.



2025 2026ம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை சட்ட மன்ற அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் தமிழ் கடவுள் என்று போற்றப்படுகின்ற முருகப் பெருமான் வீற்றிருக்கும் அறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருத்தணி, பழமுதிர்சோலை ஆகியவற்றிற்கு மூத்த குடிமக்கள், ஒரேமுறையாக சென்று தரிசனம் செய்திடும் வகையில் கட்டணமில்லாமல் 60 வயது முதல் 70 வயதிற்குட்பட்ட 2,000 பக்தர்கள் அழைத்து செல்லப்பட உள்ளனர்.

ஆன்மிகப் பயணம் செல்ல விரும்பும் பக்தர்கள் இந்து மதத்தை சார்ந்தவராகவும், 60 வயதிற்கு மேல் 70 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.2,00,000/க்கு மிகாமல் இருப்பதோடு, அதற்கான வருமான சான்றிதழை வட்டாட்சியரிடமிருந்து பெற்று இணைக்க வேண்டும். போதிய உடல் தகுதி உள்ளதற்கான மருத்துவ சான்றுடன், ஆதார் நகல் இணைக்கப்பட வேண்டும்.

இந்த ஆன்மிகப் பயணத்திற்கான விண்ணப்ப படிவங்களை அந்தந்த மண்டல இணை ஆணையர் அலுவலகங்களில் நேரில் பெற்றோ அல்லது www.hrce.tn.gov.in என்ற இந்து சமய அறநிலையத்துறை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்தோ விண்ணப்பிக்கலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை உரிய சான்றுகளுடன் இணைத்து சம்பந்தப்பட்ட மண்டல இணை ஆணையர் அலுவலகத்தில் 15.09.2025க்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

அறுபடைவீடு ஆன்மிகப் பயணம் தொடர்பான விவரங்களுக்கு துறையின் இணையதளத்திலோ அல்லது 1800 425 1757 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். ஆகவே, இந்த ஆன்மிகப் பயணத்தில் பங்கேற்க விரும்பும் தகுதியுடைய மூத்த குடிமக்கள் விண்ணப்பித்து பயன் பெறலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தூத்துக்குடியில் கல்லூரி மாணவர்கள் போராட்டம்

தூத்துக்குடி ஆக. 8

தூத்துக்குடி வ.உ.சிதம்பரம் கல்லூரி சுயநிதி பாடப்பிரிவில் கடந்த 2024ம் ஆண்டு வகுப்பு நேரம் காலை 8.30 மணி முதல் மதியம் 1 மணி வரை இருந்தது. தற்போது மதியம் 2 மணி முதல் மாலை 6 மணி வரை வகுப்பு நேரம் மாற்றப்பட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், மீண்டும் பழைய நேரப்படி வகுப்புகள் நடைபெற வேண்டும் என்று வலியுறுத்தியும்



இந்திய மாணவர் சங்கம்(SFI) மாவட்ட தலைவர் மாடசாமி தலைமையில் மாணவர்கள் வகுப்புகளை புறக்கணித்து போராட்டம் நடத்தினர்.

# சிறப்பு எஸ்.ஐ. கொலை: சமூகம் அழிவு பாதையை நோக்கி சென்று கொண்டு இருப்பதற்கான அறிகுறி: அண்ணாமலை கண்டனம்

சென்னை, ஆக. 8

போலீஸ் சிறப்பு எஸ்.ஐ., கொலை சம்பவத்திற்கு தமிழக பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் நேற்று இரவு சீருடையில் இருக்கும்போதே போலீஸ் சிறப்பு எஸ்.ஐ., சண்முகவேல் கொல்லப்பட்டு உள்ளார். நமது சமூகம் அழிவு பாதையை நோக்கி சென்று கொண்டு இருப்பதற்கான அறிகுறியாகும்.

குற்றவாளிகள் அல்லது ஒரு சாதாரண மனிதர் கோபத்தில் ஒரு போலீஸ்காரர் மீது கொடூர தாக்குதல் நடத்தி, பொது இடத்தில் கொல்லத் தூண்டுவது எது? அவர்களின் மனசாட்சிப்படி, இவ்வளவு பெரிய குற்றத்திலிருந்து தப்ப முடியாது என்பது நன்கு தெரியும். ஆனாலும் அதை செய்கிறார்கள் ஏன்? அதிகாரத்தில் உள்ள அரசாங்கத்தாலும், சில்லறை விற்பனையாளர்களாகச் செயல்படும் அரசாங்க கடைகளாலும், அதிக போதை உள்ள மதுக்களால் சாத்தியமாக்கப்பட்டது.



போதைப்பொருட்களின் பயன்பாடு அதிகரித்தல் உள்ளிட்ட காரணங்களால் கிராமம் முதல் நகர்ப்புறம் வரை எல்லா இடங்களிலும் சட்டம் ஒழுங்கு மோசமடைந்து வருகிறது. குறிப்பாக கீழ் மட்டங்களில் உள்ள துணை ஆய்வாளர் மற்றும் அதற்குக் கீழே பொறுப்பு வகிப்பவர்கள் உட்பட அனைத்து போலீசாரும் தொழில்நுட்ப ரீதியாக ஆயுதம் ஏந்தியிருக்க வேண்டிய நேரம் இது.

டேசர் துப்பாக்கிகள், பாடி கேமராக்கள், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கிகள் கொள்முதல் அதிகரித்தல், சிறந்த ரோந்து கார்கள், மிகமுக்கியமாக, நீண்ட காலமாக நிலுவையில் உள்ள காலியிடங்களை நிரப்ப வேண்டும். போலீசார் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளுக்கு 'நண்பர்' இல்லாமல் தனியாகச் செல்லக்கூடாது.

உயர்மட்டத்தில் எடுக்கப்படும் தவறான கொள்கை முடிவு, கீழ்மட்டத்தில் உள்ள சாமானிய மக்களை நேரடியாக பாதிக்கின்றன. இது நமது தூங்கிக்கொண்டிருக்கும் தமிழகஉள்துறைஅமைச்சரான, நமது முதல்அமைச்சருக்கும் ஒரு எச்சரிக்கை மணியாக இருக்கும் என்று நம்புகிறேன். இவ்வாறு அண்ணாமலை அதில் பதிவிட்டுள்ளார்.

# கலைஞர் பல்கலைக்கழக மசோதா விவகாரம்: கவர்னருக்கு செல்வப்பெருந்தகை கண்டனம்

சென்னை ஆக. 8

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழக கவர்னராக ஆர். என். ரவி நியமனம் செய்யப்பட்டதிலிருந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழக அரசை முடக்குகின்ற வகையில் நாள்தோறும் செயல்பட்டு வருகிறார். கவர்னர் மாளிகையை தமிழக பா.ஜ.க.வின் கிளை அலுவலகமாக மாற்றி வருகிறார். ஆர்.எஸ்.எஸ்.ன் நச்சுக் கருத்துகளை பரப்புகின்ற ஊதுகுழலாக செயல்பட்டு வருகிறார். மேலும், கடந்த சில ஆண்டுகளாக பத்திற்கும் மேற்பட்ட மசோதாக்களுக்கு கவர்னர் ஒப்புதல் வழங்காமல் முடக்கி வைத்திருந்தார்.

இதை எதிர்த்து தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் தொடுத்த வழக்கில் கடந்த ஆண்டு நவம்பர் 10ம் தேதி வரலாற்றுப் புகழ்மிக்க ஒரு தீர்ப்பை வழங்கியது. இதன் மூலம் கவர்னரின் அரசமைப்புச் சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு கடிவாளம் போடப்பட்டது. மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதில் கால நிர்ணயம் செய்து ஆணை பிறப்பித்தது மாநில உரிமைகளை பாதுகாக்கின்ற நடவடிக்கையாக கருதப்பட்டு நாடு முழுவதும் வரவேற்பை பெற்றது. ஆனால், இந்த தீர்ப்பை உதாசீனப்படுத்துகின்ற வகையில் கலைஞர் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான சட்ட மசோதாவிற்கு கவர்னர் ஆர்.என். ரவி அனுமதி அளிக்காமல் ஜனாதிபதி திரவுபதி முர்முவுக்கு அனுப்பி வைத்திருக்கிறார். இத்தகைய ஜனநாயக விரோதப் போக்கை வன்மையாக கண்டிக்கிறேன்.



தமிழ்நாடு சட்டப்பேரவையில் கடந்த ஏப்ரல் 28ம் தேதி கும்பகோணத்தில் கலைஞர் கருணாநிதி பெயரில் கலைஞர் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்ற சட்ட முன்வடிவை உயர்கல்வித்துறை அமைச்சர் கோ.வி. செழியன் தாக்கல் செய்து, நிறைவேற்றப்பட்டு, கவர்னர் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. அரியலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் வாழும் மாணவர்களின் மேம்பாட்டிற்காக கலைஞர் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட உள்ளது. கருணாநிதி பெயரிலான பல்கலைக்கழகத்தின் வேந்தராக முதல்அமைச்சரும், உயர்கல்வித் துறை அமைச்சரும் இருப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

மொத்தம் 17 கல்லூரிகள் கலைஞர் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் எனவும் அந்தசட்டமுன்வடிவில் குறிப்பிடப்பட்டிருந்தது. சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டு 3 மாதங்களுக்கு மேலாகியும் தமிழக கவர்னர் ஆர்.என். ரவி ஒப்புதல் வழங்காமல் தற்போது ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்திருப்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகின்ற செயலாகும். இது சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பை அவமதிக்கின்ற நடவடிக்கையாகும். மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்க வலியுறுத்த கவர்னரை சந்திக்க நேரம் கேட்டாலும் அனுமதி கிடைக்கவில்லை.

இனி சுப்ரீம் கோர்ட்டில் மீண்டும் வழக்கு தொடுத்து கவர்னருக்கு மறுபடியும் புத்தி புகட்டுகின்ற வகையில் ஆணையை பெறுவதன் மூலமே மாநில உரிமைகளை காப்பாற்ற முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. மசோதா மீது முடிவெடுக்க கவர்னர்கள் மற்றும் ஜனாதிபதிக்கு சுப்ரீம் கோர்ட்டு 3 மாதங்கள் மட்டுமே காலக்கெடு விதித்திருந்தது. இந்த கால தாமதம் மீறப்பட்டதால் தற்போது தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# நெல்லையில் பள்ளி மாணவர்கள் இடையே மோதல்: நடந்தது என்ன? காவல்துறை விளக்கம்



திருநெல்வேலி ஆக. 8

திருநெல்வேலி மாவட்ட காவல்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

சேரன்மகாதேவி பகுதியில் உள்ள பள்ளியில் பயின்று வரும் இரண்டு மாணவர்களுக்கு இடையில் பள்ளியில் நண்பர்களுடன் பேசுவது தொடர்பாக ஏற்பட்ட வாய்த்தகராறை தொடர்ந்து, ஒரு தரப்பு மாணவர் நண்பர்களுடன் சென்று, எதிர் தரப்பு மாணவருடன் வாய் தகராறில் ஈடுபட்டு, அதன் தொடர்ச்சியாக, அந்த மாணவரை தாக்கி கையில் காயம் ஏற்படுத்தியுள்ளார். சம்பவம் குறித்த தகவல் கிடைத்தவுடன், சேரன்மகாதேவி காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று நடவடிக்கை மேற்கொண்டு, காயமடைந்த மாணவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

பாதிக்கப்பட்ட மாணவரிடமிருந்து வாக்குமூலம் பெற்று வழக்குப்பதிவு செய்த போலீசார், மேற்கொண்ட புலன் விசாரணையில் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் 5 சிறுவர்கள் மற்றும் ஒரு இளைஞர் என்பது உறுதி செய்யப்பட்டது. அதன்பேரில் ஐந்து சிறுவர்கள் உடனடியாக கையகப்படுத்தப்பட்டு, சிறுவர் நீதி மன்ற குழுமத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, கூர் நோக்கு இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவமானது, பள்ளி பயிலும் மாணவர்களுக்கிடையே நண்பர்களுடன் பேசுவது தொடர்பாக ஏற்பட்ட வாய் தகராறின் தொடர்ச்சியாக நடைபெற்ற நிகழ்வாகும். இச்சம்பவத்தினை சமூக வலைத்தளத்தில் குறிப்பிட்ட இரு சமூகத்தைச் சார்ந்த நபர்களுக்கிடையே நடைபெற்ற தாக்குதல் என்று தவறாக சித்தரித்து தகவல்கள் பரப்பப்பட்டு வரப்படுகின்றன. ஆனால் மேற்சொன்ன தாக்குதல் சம்பவத்தில் பல சமூகத்தைச் சார்ந்த நபர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சமூக ரீதியான முன்விரோதத்தில் இச்சம்பவம் நடைபெறவில்லை பள்ளியில் மாணவர்கள் இடையே நடைபெற்ற தகராறில், மாணவர்கள் முதிர்ச்சியின்மை காரணமாக, உணர்ச்சி வசப்பட்டு இது போன்ற தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். ஆகவே இந்த சம்பவம் தொடர்பாக, உண்மை நிலவரம் பற்றி ஏதும் அறியாமல், உண்மைக்கு புறம்பான தகவல்களை சமூக வலைதளங்களில் பரப்பி, பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் செயல்படும் அத்தகைய செயலானது சட்டத்திற்கு விரோதமானதும், பொது மக்களின் அமைதியை கெடுக்கும் நோக்கத்துடன் பரப்பப்படும் தீய செயலாகும்.

சமூக வலைதளங்களில் குழப்பத்தினை உருவாக்கும் வகையில் செயல்படும் இத்தகைய நபர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த வருடத்தில் மட்டும், சமூக வலைதளங்களில், வன்முறையை தூண்டும் வகையில் கருத்துக்கள் பதிவு செய்த குற்றத்திற்காக 81 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 82 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளி வளாகங்களில் மாணவர்களுக்கு இடையிலான அமைதி மற்றும் ஒற்றுமை நிலவ காவல் துறை உறுதிபட நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாணவர்களும் தங்களது எதிர்கால வாழ்க்கைக்கு தேவையான சிறப்பான கல்வியை பயின்று வாழ்க்கையில் முன்னேற தங்களது சிந்தனையையும், கவனத்தினையும் செலுத்துமாறும், தேவையற்ற வன்முறை பிரச்சினைகளில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும் என்று மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் தெரிவித்துள்ளார். மேலும் அவர் இது போன்ற குற்ற சம்பவங்களில் ஈடுபடுவது அவர்களது வளமான எதிர்கால வாழ்க்கையை கேள்விக்குறியாக்கும் என்பதை மனதில் கொண்டு செயல்பட வேண்டும் என்றும் அறிவுரை வழங்கியுள்ளார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அதிமுக போகும் போக்கே சரியில்லை திமுகவில் இணைந்த பின் முன்னாள் எம்.எல்.ஏ கார்த்திக் தொண்டைமான் பேட்டி

சென்னை, ஆக. 8

புதுக்கோட்டை அதிமுக முன்னாள் எம்எல்ஏ கார்த்திக்தொண்டைமான் இன்று திமுகவில் இணைந்தார். முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தன்னை திமுகவில் இணைத்துக்கொண்ட கார்த்திக் தொண்டைமான் பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

அதிமுக மதவாத சக்திகளுக்கு துணை போகிறது. அதிமுக போகும் போக்கே சரியில்லை. தமிழகத்தில் மதவாத சக்திகள் தலைதூக்ககூடாது என்ற நோக்கத்தில் திமுகவில் இணைந்துள்ளேன். முதல் அமைச்சர் முக ஸ்டாலினின் நல்லாட்சியில் தமிழகம் வளர்ந்து கொண்டுள்ளது. நான் அதற்கு உறுதுணையாக இருந்து பணியாற்றுவேன்" என்று கூறினார்.



கடந்த 2012 ஆம் ஆண்டு புதுக்கோட்டை தொகுதியில் நடந்த சட்டமன்ற இடைத்தேர்தலில் அதிமுக சார்பில் போட்டியிட்டு கார்த்திக் தொண்டைமான் வென்றார். அதன்பின்னர் 2016 மற்றும் 2021 தேர்தல்களில் புதுக்கோட்டை தொகுதியில் போட்டியிட்டு தோல்வியை தழுவினார்.

# ஊபர் செயலியில் சென்னை மெட்ரோ ரெயில் டிக்கெட் முன்பதிவு வசதி அறிமுகம்

சென்னை, ஆக. 8

சென்னையில் போக்குவரத்து நெரிசலில் சிக்காமல் குறிப்பிட்ட நேரத்திற்குள் ஒரு இடத்திற்கு செல்வதற்கு மெட்ரோ ரெயில் சேவை மிகவும் கை கொடுத்து வருகிறது. மெட்ரோ ரெயில் நிலையங்களில் இருந்து புறநகர் ரெயில் நிலையம், பஸ் நிலையம் போன்ற வற்றை இணைக்கும் வசதியும் செய்யப்பட்டுள்ளது. இதனால் தினமும் 3.25 லட்சம் பேர் பயணம் செய்கிறார்கள். 2 வழித்தடங்கள் மூலம் மெட்ரோ ரெயில்கள் தற்போது இயக்கப்பட்டு வருகிறது. மெட்ரோ ரெயிலில் பயணிகள் எளிதாக செல்ல பல்வேறு வசதிகள் செய்யப்பட்டு உள்ளன. இதனால் நாளுக்கு நாள் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.



இந்த நிலையில் ஊபர் செயலியிலும் இனி சென்னை மெட்ரோ ரெயில் டிக்கெட்டுகளை பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஊபர் செயலி மூலம் இன்று முதல் ஆகஸ்ட் 31 வரை 50 சதவீதம் சலுகை விலையில் மெட்ரோ டிக்கெட்டை பெறலாம். (QR Codeஐ) க்கியூஆர் கோர்டை பயன்படுத்தி மெட்ரோ ரெயில் டிக்கெட்டை பெறலாம். மெட்ரோ ரெயில் நிலையங்களுக்கு செல்லவும், திரும்பவும் பயணக்கட்டணத்திலும் 50சதவீதம் சலுகை அறிவித்துள்ளது. ஆட்டோ, கார், டூவீலர் முன்பதிவு செய்யும் ஊபர் செயலிலேயே மெட்ரோ ரெயில் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. டெல்லிக்கு அடுத்து ஊபர் செயலி மூலம் மெட்ரோ டிக்கெட் வசதியை பெறும் 2வது நகரம் சென்னையாகும்.

# அக்காவின் கையை பிடிக்க ஆசையாக ஓடிவந்த 3 வயது குழந்தை.. அடுத்து நடந்த கொடூரம்

தேன்கனிக்கோட்டை, ஆக. 8

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அருகே சீகோட்டையை சேர்ந்தவர் ஜான்பாஷா. விவசாயியான அவருக்கு அல்பியா (6), ஆஷியா (3) ஆகிய 2 மகள்கள் இருந்தனர். தனியார் பள்ளியில் அல்பியா 1ம் வகுப்பு படித்து வருகிறாள். நேற்று பள்ளி சென்று விட்டு மாலையில் பள்ளி பஸ்சில் அல்பியா திரும்பி வந்தார். தனது அக்காளை பார்த்ததும் ஓடி சென்ற குழந்தை ஆஷியா பஸ்சின் முன்புற சக்கரத்தின் அருகில் சென்றாள். இதை அறியாத டிரைவர் பஸ்சை இயக்கியதால் குழந்தை ஆஷியா, பஸ் சக்கரத்தில் சிக்கி பலியானார்.

இதைக்கண்டு அதிர்ச்சி அடைந்த அந்த பகுதி பொதுமக்கள், உறவினர்கள் பஸ்சின் கண்ணாடியை உடைத்தனர். மேலும் டிரைவரை கைது செய்யக்கோரி பொதுமக்கள் தேன்கனிக்கோட்டையில் அஞ்செட்டி சாலையில் மறியலில் இடுபட்டனர். தகவல் அறிந்த துணை போலீஸ் சூப்பிரண்டு ஆனந்தராஜ், இன்ஸ்பெக்டர் கணேஷ்குமார் மற்றும் போலீசார் பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். இந்த



சம்பவம் தொடர்பாக தேன்கனிக்கோட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.. இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# தமிழக அரசின் வளர்ச்சிக்கு மத்திய அரசு இடையூறு செய்கிறது சபாநாயகர் அப்பாவு பேட்டி



நாகர்கோவில், ஆக. 8

சபாநாயகர் அப்பாவு நாகர்கோவிலில் இன்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

இந்திய வெளியுறவு கொள்கை பலவீனம் ஆகிவிட்டது. பஹல்காம் தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தானை உலகளவில் ஒரு நாடு கூட கண்டிக்கவில்லை. அதுவே நம்முடைய பலகீனம் தானே. சபாநாயகர் தொகுதியிலேயே சட்ட ஒழுங்கு சரியில்லை என்று இன்பதுரை கூறியுள்ளார். ஆனால் அவர் கூறியதை வைத்து முடிவு எடுக்க முடியாது. சட்ட ஒழுங்கு பிரச்சினை ஒரு இடத்திலும் இல்லை. அதே சமயம் திருப்பூரில் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் கொலை செய்யப்பட்டுள்ளார். அ.தி.மு.க. எம்.எல்.ஏ. தோட்டத்தில் இந்த சம்பவம் நடந்துள்ளது. இதை வைத்து சட்ட ஒழுங்கை சீர்குலைப்பது யார்? என்பதை தெரிந்து கொள்ளலாம்.


தமிழக அரசு தென்மாவட்டங்களுக்கு அதிக வளர்ச்சி பணிகள் செய்யவில்லை என்றும், மத்திய அரசின் திட்டங்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டியதாகவும் எல்.முருகன் கூறியுள்ளார். தூத்துக்குடி விமான நிலையம், துறைமுகவிரிவாக்கம், தேசிய நெடுஞ்சாலை உள்ளிட்ட பணிகளை மத்திய அரசு தான் மேற்கொண்டு இருப்பதாகவும் கூறியிருக்கிறார். ஆனால் அவர் எந்த காரணத்துக்காக குற்றம் சொல்கிறார் என்று தெரியவில்லை. தமிழகம் தான் இந்தியாவிலேயே கடந்த 4 ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சி 11.19 சதவீதம் ஆகும். இந்த புள்ளி விவரத்தை மத்திய அரசு தான் தந்துள்ளது. எனவே அதை எல்.முருகன் படிக்க வேண்டும்.

தமிழக அரசு வளர்ச்சிக்கு மத்திய அரசு எவ்வளவு இடையூறு செய்ய முடியுமோ செய்து வருகிறார்கள். தமிழகம் பொருளாதார வளர்ச்சியில் முதலிடத்தில் இருப்பதை தாங்க முடியாமல் இதுபோன்று சொல்கிறார்கள். எதிர்க்கட்சி தலைவரின் சுற்று பயணத்தால் தமிழகத்தில் எதாவது மாற்றம் ஏற்பட்டு இருக்கிறதா? என்று அவரிடம் தான் கேட்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# தூத்துக்குடி: அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குள் புகுந்த 6 அடி நீள பாம்பு பிடிபட்டது


தூத்துக்குடி ஆக. 8

தூத்துக்குடி மாவட்டம், மாப்பிள்ளையூரணி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 6 அடி நீள சாரைப்பாம்பு உள்ளே புகுந்தது. இதுகுறித்த தகவலின்பேரில், அங்கு விரைந்து வந்த தூத்துக்குடி தீயணைப்பு நிலைய உதவி மாவட்ட அலுவலர் நட்டார் ஆனந்தி தலைமையிலான பணியாளர்கள் அந்த பாம்பினை பாதுகாப்பாக பிடித்து வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர்.



தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
8.8.2025

# 17 வயதில் துளிர்விட்ட ஆசை.. உல்லாச வலையில் சிக்கிய பல ஆண்கள் இளம்பெண் அளித்த பரபரப்பு வாக்குமூலம்



சென்னை, ஆக. 8

சென்னை ஆவடி காமராஜர் நகரைச் சேர்ந்தவர் மணி (வயது 47). பிரபல தொழில் அதிபரான இவர், சமீபத்தில் சென்னை கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் உள்ள நட்சத்திர ஓட்டலில் அறை எடுத்து தங்கினார். அவருடன் தோழி தீபிகாவும் (24) தங்கியிருந்தார். அப்போது இருவரும் ஒன்றாக மது அருந்தியதாக தெரிகிறது. போதை மயக்கத்தில் மணி தூங்கி விட்டார். காலையில் எழுந்து பார்த்தபோது மணி கழுத்தில் அணிந்திருந்த 10 பவுன் தங்க சங்கிலி திருட்டுப்போய் இருந்தது. தோழி தீபிகாவை காணவில்லை.

இதுதொடர்பாக மணி, தேனாம்பேட்டை போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். இதுதொடர்பாகதேனாம்பேட்டை குற்றப்பிரிவு இன்ஸ்பெக்டர் சபரிதாசன், சப்இன்ஸ்பெக்டர் ராமசந்திரன் ஆகியோரும் வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர். நகையை திருடியதாக தீபிகா கைது செய்யப்பட்டார்.

தீபிகாவிடம் போலீசார் நடத்திய விசாரணையில் அவருடன் நெருக்கமாக பழகி வந்த காதலன் சதீஷ்குமார் (24) என்பவர் உதவியுடன் திருடிய நகையை தீபிகா ரூ.7 லட்சத்துக்கு விற்றுள்ளார். நகையை விற்ற பணத்தில் காதலன் சதீஷ்குமாருக்கு ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கி கொடுத்தார். மீதியுள்ள பணத்தை தீபிகாவும், காதலன் சதீஷ்குமாரும் வைத்துள்ளனர். மீதி பணமும், மோட்டார் சைக்கிளும் போலீசாரால் பறிமுதல் செய்யப்பட்டது.

இதற்கிடையில் விற்பனை செய்த நகையை மகேஸ் என்பவர் வாங்கியது கண்டறியப்பட்டது. அந்த நகையை உருக்கி விட்டதாக தீபிகா போலீசாரிடம் தவறான தகவலை சொன்னார். ஆனால் போலீசார் மகேசை பிடித்து விசாரித்தனர். அவர் நகையை உருக்காமல் அப்படியே வைத்திருந்தார். அந்த நகையும் மீட்கப்பட்டது. திருட்டு நகையை விற்க உதவியதாக தீபிகாவின் காதலன் சதீஷ்குமாரும் கைது செய்யப்பட்டார்.

தீபிகா போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் கூறியதாவது:

நான் எனது பெற்றோரை பிரிந்து தற்போது தனியாக வாழ்கிறேன். எனக்கு 17 வயதிலேயே திருமணம் ஆகிவிட்டது. எனது கணவர் பிரிந்துசென்று விட்டார். 4 வயதில் ஒரு மகன் இருக்கிறான். எனக்கு ஆடம்பரமாக வாழ வேண்டும் என்ற ஆசை 17 வயதிலேயே துளிர் விட்டது. எனக்கு நிறைய ஆண் நண்பர்கள் உள்ளனர். அவர்கள் எனது ஆசையை பூர்த்தி செய்து வைப்பார்கள். இந்தநிலையில், தொழில் அதிபர் மணியை ஓட்டலில் தான் முதன் முதலில் சந்தித்தேன். இருவரும் ஓட்டலில் அறை எடுத்து தங்கி மது அருந்தினோம். இருவரும் உல்லாசமாக இருந்தோம்.

மதுமயக்கத்தில் மணி தூங்கிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்க சங்கிலியை திருடிச் சென்று விட்டேன். என்னுடைய ஆண் நண்பர்களை மயக்கி பலரிடம் பணம் பறித்துள்ளேன். ஆனால் யாரும் புகார்கொடுக்கவில்லை. முதல்முறையாக மாட்டிக்கொண்டேன்.

இவ்வாறு தீபிகா வாக்குமூலத்தில் கூறி இருப்பதாக போலீசார் தெரிவித்தனர்.

கைதான தீபிகாவும், அவரது காதலன் சதீஷ்குமாரும் நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டனர். தீபிகா தான் பழகும் ஒவ்வொரு ஆணிடமும் தனக்கு திருமணம் ஆகவில்லை என்று பொய் சொல்லியே பழகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அருணாப்பேரி மேகம் திரை கொண்ட சாஸ்தா கோவில் ஆடித் திருவிழா



தென்காசி, ஆக. 8

தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம் அருகே உள்ள அருணாப்பேரியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மரத்தடி மேகம் திரை கொண்ட சாஸ்தா கோவிலின் ஆடி மாத திருவிழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

இதையொட்டி நேற்று காலை 9 மணி அளவில் குற்றால தீர்த்தம் எடுத்து வரப்பட்டு கணபதி ஹோமமும் அதனைத் தொடர்ந்து சாஸ்தா மற்றும் பரிவார தெய்வங்களுக்கு சிறப்பு அபிஷேகமும் நடைபெற்றது. மதியம் உச்சிகால பூஜை நடைபெற்றது.

திருவிழாவின் சிகர நிகழ்ச்சியாக மாலையில் சாஸ்தா வீதி உலா நிகழ்ச்சி நடைபெற்றது. மண்ணால் செய்யப்பட்ட குதிரையின் மீது மேகம் திரை கொண்ட சாஸ்தா எழுந்தருளி, மேளதாளங்கள் முழங்க கீழப்பாவூரில் இருந்து புறப்பட்டு வந்தார். சாஸ்தாவை பக்தர்கள் தோள்களில் சுமந்து ஊர்வலமாக அருணாப்பேரி கிராமத்திற்கு அழைத்து வந்தனர். அருணாப்பேரியில் உள்ள முத்தாரம்மன் கோவிலில் பூஜை நடைபெற்ற பின்னர், அங்கிருந்து ஊர்வலமாக கோவிலை வந்தடைந்தனர்.

வழி நெடுகிலும் பக்தர்கள் சாஸ்தாவிற்கு மலர் மாலைகள் மற்றும் எலுமிச்சை மாலைகளை அணிவித்து தரிசனம் செய்தனர். மண் குதிரையில் எழுந்தருளிய சாஸ்தாவை ஆறு கிலோமீட்டர் தொலைவிற்கு பக்தர்கள் தோள்களில் சுமந்து வந்த நிலையில், கோவிலை வந்தடைந்ததும் சாஸ்தாவிற்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. பின்னர் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இரவில் வில்லிசையுடன் உச்சிகால சிறப்பு பூஜையும் அதிகாலையில் பொங்கல் வைக்கும் வைபவமும், அதனைத் தொடர்ந்து கிடா வெட்டு நிகழ்வும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் முடி காணிக்கை செய்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.

விழாவில் பாவூர்சத்திரம் சுற்றுவட்டார பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் (8.8.2025)



மன உறுதி அதிகரிக்கும். முயற்சிகளில் வெற்றி. புதிய செயல்களில் கவனம் தேவை.



குடும்ப சூழ்நிலை சாதகமாக இருக்கும். பணி: அலுப்பு குறையும். பண வரத்து சீராகும். அறிவுரை: பழைய நண்பர்களிடம் எச்சரிக்கை.



பயண யோகம் உண்டு. வேலை: தொழில் வளர்ச்சி. புதிய வாய்ப்பு கிட்டும். அறிவுரை: உடல் நலம் குறைவாக இருக்கலாம்.



ஆன்மிக எண்ணங்கள் அதிகரிக்கும். பணியிடம்: மேலதிகாரிகள் பாராட்டு. அறிவுரை: சலனங்களை தவிர்க்கவும்.



நல்ல செய்தி வர வாய்ப்பு. வேலை: வேலைக்கான பேச்சுவார்த்தை வெற்றியாகும். அறிவுரை: செலவுகளை கட்டுப்படுத்தவும்.



உறவினர் சந்திப்பு மகிழ்ச்சியளிக்கும். பணியிடம்: உழைப்பிற்குமதிப்புகிடைக்கும். அறிவுரை: கோபம் தவிர்க்கவும்.



சந்தோஷமான நாள். பணியிடம்: திட்டமிட்ட வேலைகள் முடியும். அறிவுரை: காரியம் தாமதமாகலாம் – பொறுமை தேவை.



பழையகவலைதீரும்.வேலை: பதவி உயர்வு வாய்ப்பு. அறிவுரை: குடும்பத்தில் சின்ன சச்சரவுகள்.



அனுகூலமான நாள். வேலை: தொழில் வளர்ச்சி, புதிய ஒப்பந்தம். அறிவுரை: சுகாதாரத்தில் கவனம் தேவை.



சுமாரான நிலை. வேலை: பணிச்சுமை அதிகரிக்கலாம். அறிவுரை: முடிவுகள் எடுக்கும் போது சிந்திக்கவும்.



மகிழ்ச்சி அதிகம். வேலை: மனதிற்கு உகந்த செயல்கள் வெற்றி தரும். அறிவுரை: தவறான ஆலோசனைகளில் செல்ல வேண்டாம்.



சிறந்த நாள். வேலை: புதிய திட்டங்களுக்கு ஆதரவு கிடைக்கும். அறிவுரை: மூலதன செலவுகள் அதிகரிக்கலாம்.

# கோவை காவல் நிலையத்தில் ஒருவர் உயிரிழப்பு: நடந்தது என்ன? காவல் ஆணையர் விளக்கம்



கோவை, ஆக. 8

கோவை பெரிய கடைவீதியில் பி1 காவல்நிலையம் அமைந்துள்ளது. இந்த காவல்நிலையத்தில் நேற்றிரவு 11 மணியளவில் ஒருவர் புகாரளிக்க வந்ததாகவும், இன்று காலையில் காவல் நிலையத்திலேயே அவர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

எஸ்.ஐ. அறையில் அந்த நபர் தூக்கிட்டு தற்கொலை செய்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இதுகுறித்து காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்தநிலையில் காவல் நிலையத்தில் தற்கொலை செய்து கொண்ட விவகாரம் குறித்து கோவை காவல் ஆணையர் சரவணசுந்தர் விளக்கமளித்துள்ளார்.

இதுதொடர்பாக செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் பேசியதாவது:

உதவி காவல் ஆய்வாளர் அறையில் தற்கொலை செய்த சம்பவம் யாருக்கும் தெரியவில்லை. காலையில் பணிக்கு வந்தவர்கள் அறையை திறந்து பார்த்த போது தான் தெரிய வந்தது. தொடர்ந்து நடந்த விசாரணையில் பி1 காவல் நிலையத்தில் தற்கொலை செய்துக்கொண்ட நபர் பெயர் அறிவொளி ராஜன் (60) பேரூர் சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது. இவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என உறவினர்களிடம் நடத்திய விசாரணையில் தெரியவந்தது.

தன்னை சிலர் துரத்துவதாக கூறி காவல் நிலையம் வந்த அறிவொளி ராஜன், காவல்நிலையத்தில் முதல் மாடியில் உள்ள எஸ். ஐ .அறைக்கு சென்று தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டது விசாரணையில் தெரியவந்தது. இந்த சம்பவத்தில் பணியின் போது கவன குறைவாக இருந்த காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். காவல் நிலையத்தில் நடந்த இந்த விவகாரம் தற்கொலை மட்டும் தான். லாக்கப் மரணம் கிடையாது. தொடர்ந்து இந்த விவகாரத்தில் நீதிபதி தலைமையில்விசாரணைநடத்தப்பட உள்ளது. உதவி ஆணையர் தலைமையில் விசாரணை மேற்கொள்ளப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# இந்தியில் பேச மறுத்த நடிகை கஜோல்



பாலிவுட் திரையுலகின் கதாநாயகிகளில் கஜோல் முக்கியமானவர். சமீபத்தில் அவர் மகாராஷ்டிரா அரசு வழங்கிய மாநில திரைப்பட விருது 2025 விழாவில் கலந்து கொண்டார். கஜோல் கலைத்துறையில் செய்த செயல் மற்றும் அவரது இந்திய சினிமா பங்களிப்பை முன்னிட்டு கவுரவ விருதான ராஜ் கபூர் விருதை வழங்கினர்.

அப்போது அங்கு பத்திரைக்கையாளர்களை சந்தித்தார் கஜோல். கஜோல் பத்திரிக்கையாளர்கள் கேட்கும் கேள்விகளுக்கு ஆங்கிலம் மற்றும் மராத்தி மொழியில் பதிலளித்தார். அப்போது ஒருவர் இந்தியில் பதிலளிக்கும்படி கேட்டுக்கொண்டார். இதை கேட்ட கஜோல் சாட்டென கடுப்பாகி " இப்போ நான் இந்தியில் பேச வேண்டுமா? நான் பேசியது புரிய வேண்டியவர்களுக்கு புரியும்" என்ற கருத்தை பதிவு செய்துவிட்டு கிளம்பினார். இந்த காணொலி தற்பொழுது இணையத்தில் வைரலாகி வருகிறது. கடந்த சில மாதங்களாக இந்தி மற்றும் மராத்தி மொழிகளுக்கு இடையே நிகழும் சர்ச்சையால் கஜோலின் இப்பதில் காரசார விவாதமாக மாறியுள்ளது.

நடிகை கஜோல் பாலிவுட்டின் முன்னனி நாயகியாக இருந்தவர். ஷாருக்கானுடன் இவர் இணைந்து நடித்த பல படங்கள் சூப்பர் ஹிட் ஆகியுள்ளன. தமிழில் நடிகர் பிரபு தேவாவுடன் மின்சாரக் கனவு படத்தில் நடித்திருந்தார். பின், நீண்ட காலம் கழித்து நடிகர் தனுஷுடன் 'வேலையில்லா பட்டதாரி 2' திரைப்படத்தில் வில்லியாக நடித்து கவனம் பெற்றார்.

# "கிங்டம்" :திரையரங்குகளுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் காவல்துறைக்கு நீதிமன்றம் உத்தரவு




"கிங்டம்":திரையரங்குகளுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் காவல்துறைக்கு நீதிமன்றம் உத்தரவு

தமிழ்நாட்டில் விஜய் தேவரகொண்டா நடிப்பில் வெளியாகியுள்ள 'கிங்டம்' படம் திரையிடப்பட்டுள்ள திரையரங்குகளுக்கு பாதுகாப்பு வழங்கக் கோரி சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது.

தமிழ் ஈழ பிரச்சினை குறித்து அவதூறு காட்சிகள் இடம்பெற்றுள்ளதால், திரையரங்குகளை முற்றுகையிடும் போராட்டம் நடத்தப்படும் என சீமான் அறிவித்ததை அடுத்து பாதுகாப்பு கோரி படத்தின் தமிழக வெளியீட்டு உரிமையை பெற்றுள்ள எஸ்.எஸ்.ஐ புரொடெக்சன் நிறுவனம் வழக்கு தொடர்ந்தது.

இந்த வழக்கை நேற்று விசாரித்த நீதிபதி, சென்சார் போர்டு அனுமதித்த திரைப்படத்தை வேறு எந்த வகையிலும் தடுக்க முடியாது எனவும் படத்தை யாரும் பார்க்க வேண்டாம் என பிரச்சாரம் வேண்டுமானால் செய்யலாம் எனவும் கூறினார். மேலும், கிங்டம் திரைப்பட விவகாரத்தில் ஜனநாயக ரீதியாக போராட வேண்டும் என்று கூறி பட வெளியீட்டு நிறுவனத்தின் மனுவுக்கு பதிலளிக்க காவல்துறைக்கும், நாம் தமிழர் கட்சிக்கும் உத்தரவிட்டு விசாரணையை தள்ளி வைத்தார்.

இந்நிலையில் இன்று வழக்கு விசாரணையின்போது "சென்சார் சான்று வழங்கப்பட்ட பிறகு படம் திரையிடப்படுவதை யாரும் தடுக்க முடியாது. அதே நேரத்தில் உரிய அனுமதி பெற்று போராட்டம் நடத்த நாம் தமிழர் கட்சிக்கு உரிமை உள்ளது" என்று நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.'கிங்டம்' படம் திரையிட இடையூறு செய்தால், திரையரங்குகளுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று காவல்துறைக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

படம் திரையிடுவதை எந்த வகையிலும் தடுக்கவில்லை என நாதக தரப்பு வழக்கறிஞர் உறுதியளித்துள்ளார்.

# "கூலி" படத்தில் என்னுடைய கதாபாத்திரம் இதுதான் நடிகை ஸ்ருதிஹாசன்




சூப்பர்ஸ்டார்ரஜினிகாந்த் கதாநாயகனாக நடித்துள்ள "கூலி" படத்தில், சத்யராஜ், நாகார்ஜுனா, உபேந்திரா, சபின் சாஹிர், ஸ்ருதிஹாசன், அமீர் கான் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளார்கள். இதனால் படத்தின் மீது இந்தியா முழுவதும் எதிர்பார்ப்பு எகிறியுள்ளது. இப்படம் வருகிற 14ம் தேதி திரைக்கு வருகிறது.

இந்த நிலையில், நேர்காணல் ஒன்றில் கலந்து கொண்டு பேசிய நடிகை ஸ்ருதிஹாசன், கூலி படத்தில் தன்னுடைய கதாபாத்திரம் குறித்து பேசியுள்ளார்.

அதாவது, கூலி படத்தில் என் கதாபாத்திரம் கொலை செய்யப்படுமா?, நான் சண்டையிடுவேனா?, என ரசிகர்கள் கேள்வி கேட்கின்றனர். இந்த படத்தில் நான் சண்டையெல்லாம் போடவில்லை. ஸ்ருதி என்ற கதாபாத்திரத்தில் சத்யராஜின் மகளாக நடித்துள்ளேன். இதன் படத்தின் கதையை கேட்டபோது, எனது கதாபாத்திரத்தை அதிகமான பெண்கள் தொடர்புப்படுத்தி கொள்ளும்படி இருக்குமென தோன்றியது. இந்த படம் டெஸ்டோஸ்டிரோன் நிறைந்த உலகமாக இருக்கும். ஆனால் நான் அதில் ஆரோக்கியமான ஈஸ்ட்ரோஜனாக இருப்பேன். என்று கூறியுள்ளார்.

# ஐ.பி.எல்.: சிஎஸ்கே அணிக்கு மாறுகிறாரா சஞ்சு சாம்சன்..? வதந்திகளுக்கு ராஜஸ்தான் முற்றுப்புள்ளி



18வது ஐ.பி.எல். சீசன் இந்த வருடம் நடைபெற்றது. இதில் ராயல்சேலஞ்சர்ஸ்பெங்களூருஅணிகோப்பையைகைப்பற்றியது. இந்தசீசன்முடிவடைந்தசிலதினங்களிலேயேஅடுத்தசீசனுக்கான பேச்சுகள் எழ ஆரம்பித்து விட்டன. அதில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் கேப்டனான சஞ்சு சாம்சன் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு மாற உள்ளதாக பரபரப்பாக பேசப்பட்டது.

இந்த சீசனில் சஞ்சு சாம்சன் தலைமையிலான ராஜஸ்தான் ராயல்ஸ் அணி 9வது இடம் பிடித்து வெளியேறியது. இந்த சீசனில் பெரும்பாலான போட்டிகளை காயம் காரணமாக சஞ்சு சாம்சன் தவறவிட்டார். சாம்சன் இல்லாத சமயத்தில் ரியான் பராக் அணியை வழிநடத்தினார்.

முன்னதாக இந்த சீசனில் ராஜஸ்தான் அணி நிர்வாகத்திற்கும் சஞ்சு சாம்சனுக்கும் இடையே மனக்கசப்பு ஏற்பட்டதாக தகவல் வெளியாகியது. அத்துடன் தலைமை பயிற்சியாளர் ஆன ராகுல் டிராவிட் சஞ்சு சாம்சன் இடையேயும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதாக கூறப்பட்டது.

இதனால் அவர் அடுத்த சீசனுக்கு (2026) முன்னதாக ராஜஸ்தான் அணியிலிருந்து விலக முடிவெடுத்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின. அத்துடன் அவர் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் இணைய உள்ளதாகவும் கூறப்பட்டது.

இதனிடையே சஞ்சு சாம்சனை டிரேடிங் முறையில் மாற்ற ராஜஸ்தான் விருப்பம் தெரிவித்துள்ளதாக கூறப்பட்டது. அதன்படி சஞ்சு சாம்சனை ராஜஸ்தான், சிஎஸ்கே அணிக்கு டிரேடிங் முறையில் கொடுக்கும் பட்சத்தில் அவருக்கு பதிலாக அதிரடி ஆல் ரவுண்டர் ஷிவம் துபே மற்றும் சுழற்பந்து வீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வின் ஆகியோரை கேட்பதாக தகவல் வெளியாகியது.

அத்துடன் இந்த தகவல்களுக்கு வலு சேர்க்கும் விதமாக சிஎஸ்கே மூத்த அதிகாரி ஒருவர் சஞ்சு சாம்சனை நாங்கள் வாங்க பார்ப்பது உண்மைதான் என்று கூறினார். இதனால் சஞ்சு சாம்சன், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் இணைகிறார் என அனைவரும் ஏறக்குறைய உறுதி செய்துவிட்டனர்.

இந்நிலையில் இந்த வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக ராஜஸ்தான் ராயல்ஸ் அணி நிர்வாகம், சஞ்சு சாம்சன் தங்களது அணியில் இருந்து வெளியேற மாட்டார் என்று உறுதி செய்துள்ளது.

இது குறித்து ராஜஸ்தான் அணி சார்பாக வெளியான தகவலின் படி,சஞ்சு சாம்சன் எங்கும் செல்லவில்லை அவர் தொடர்ந்து ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்காகவே கேப்டனாக விளையாடுவார் என கூறப்பட்டுள்ளது.

# ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசை: சுப்மன் கில் சறுக்கல்



இந்தியாஇங்கிலாந்து 5வது போட்டி மற்றும் ஜிம்பாப்வே நியூசிலாந்து முதல் டெஸ்ட் போட்டிகள் முடிவடைந்துள்ளன. இதனையடுத்து சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.), டெஸ்ட் கிரிக்கெட் வீரர்களின் புதிய தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் பேட்ஸ்மேன்களின் தரவரிசையில் இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் முதலிடத்தில் நீடிக்கிறார். இந்தியாவுக்கு எதிரான கடைசி டெஸ்டில் (5வது போட்டி) சதம் அடித்த இங்கிலாந்து வீரர் ஹாரி புரூக் ஒரு இடம் முன்னேறி 2வது இடத்தை பிடித்துள்ளார். இதே டெஸ்டின் 2வது இன்னிங்சில் சதம் விளாசிய (118 ரன்) இந்திய தொடக்க வீரர் ஜெய்ஸ்வால் 8ல் இருந்து 5வது இடத்துக்கு வந்துள்ளார்.

ஆனால் கடைசி டெஸ்டில் சொதப்பிய இந்திய கேப்டன் சுப்மன் கில் 4 இடங்கள்சறுக்கி டாப்10 இடத்தைவிட்டு வெளியேற்றப்பட்டுள்ளார். அதன்படி கில் 13வது இடத்துக்கு தள்ளப்பட்டார். அதேபோல் கடைசி டெஸ்டில் ஆடாத ரிஷப் பண்ட் ஒரு இடம் பின்தங்கி 8வது இடத்தில் உள்ளார். ஜிம்பாப்வேக்கு எதிரான முதலாவது டெஸ்டில் அரைசதம் அடித்த (80 ரன்கள்) எடுத்த நியூசிலாந்தின் டேரில் மிட்செல் 4 இடங்கள் உயர்ந்து 9வது இடத்தை பெற்றுள்ளார். டெஸ்ட் பந்து வீச்சாளர்களின் தரவரிசையில் டாப் 3 இடங்களில் மாற்றமில்லை. இந்தியாவின் ஜஸ்பிரித் பும்ரா முதலிடமும் தென் ஆப்பிரிக்காவின் ககிசோ ரபடா 2வது இடமும், ஆஸ்திரேலிய கேப்டன் பேட் கம்மின்ஸ் 3வது இடமும் வகிக்கிறார்கள். இங்கிலாந்துக்கு எதிரான இறுதி டெஸ்டில் மொத்தம் 9 விக்கெட்டுகளை வீழ்த்தி இந்தியாவின் வெற்றிக்கு வித்திட்ட வேகப்பந்து வீச்சாளர் முகமது சிராஜ் 12 இடங்கள் எகிறி 15வது இடத்தை பிடித்துள்ளார். அவரது சிறந்த தரவரிசை இதுவாகும். 8 விக்கெட்டுகள் அள்ளிய மற்றொரு இந்திய வேகப்பந்து வீச்சாளர் பிரசித் கிருஷ்ணா 25 இடங்கள் ஏற்றம் கண்டு 59வது இடத்தை பெற்றுள்ளார்.

ஜிம்பாப்வேக்கு எதிரான முதலாவது டெஸ்டில் 9 விக்கெட்டுகள் வீழ்த்தி ஆட்டநாயகன் விருதை பெற்ற நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர் மேட் ஹென்றி 3 இடங்கள் முன்னேறி 4வது இடத்தை ஆக்கிரமித்துள்ளார். இதே போல் ஓவல் டெஸ்டில் மொத்தம் 8 விக்கெட் கைப்பற்றிய இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் அட்கின்சன் இரு இடம் நகர்ந்து முதல் முறையாக டாப்10 இடத்தை பிடித்துள்ளார். அவர் மிட்செல் ஸ்டார்க்குடன் இணைந்து 10வது இடத்தை பகிர்ந்துள்ளார்.

டெஸ்ட் ஆல்ரவுண்டர்களின் தரவரிசையில் டாப்5 இடங்களில்மாற்றமில்லை. இந்தியாவின்ரவீந்திரஜடேஜா 'நம்பர் 1' ஆக வலம் வருகிறார்.

DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.